Arima Nokku

ISSN 2320-4842 (Print)
ISSN 3049-2688 (Online)

# அரிமா நோக்கு



கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE AND SCIENCE

UGC - CARE LISTED AND PEAR REVIEWED JOURNAL

https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
19 : 2 ஏப்பிரல் 2025

*ஆசிரியர்*
தமிழ்ச் செம்மல்
பேராசிரியர் முனைவர்
இரா. பன்னிருகைவடிவேலன்

*ஆசிரியர் குழு*
நா.கணேசன் (அமெரிக்கா)
நா.சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு.பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ.இலக்குமிநாராயணன்
கோ.பழனி
மு.வையாபுரி
சி.சிதம்பரம்
பா.விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச.திருநாவுக்கரசு
ப.குமார்
கி.துர்காதேவி
தே.ராஜகுமார்
த.பாலமுருகன்

ஓவியர்
சுபா. முனிவேல்
அ. கார்த்திக் தங்கராஜன்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாசிரியர்*
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

Illustration Of Native Culture And Host Culture: A Critical Study of Bharati Mukherjee s Select Fiction
M. Parvatha Varthini - Dr. C. Ramya 258

Exploring Communal Trauma: A Comparative Study of Khushwant Singh's Train to Pakistan and Manohar Malgonkar's a Bend in the Ganges
Mr. Raja - Dr. M. Sumithra 262

Exploring the Rural Realities: Perumal Murugan's Narrative Voice in Tamil Literature
P. Elayarani - Dr.K. Maheswari 268

Portrayal of Victimized Citizens and the Corrupt Hungry Rulers in Arun Joshi's The City and the River: An Appraisal
Premchandar. P - Dr. S. Chelliah 275

Pathetic Plight of the Indian Workers: A Post Humanist Study of Mulk Raj Anand s Coolie: An Appraisal
R. Esther Reshma - Dr. S. Bharathiraja 279

பொருள்சார் பண்பாடு நோக்கில் - சங்கு வளையல்
செ. விஜய்சுந்தர் - ஏ. பால்பிரபு சாந்தராஜ் 283

சங்க இலக்கியத்தில் போர்கருவிகளின் சிறப்புகள்
மா. ஜெயலட்சுமி - முனைவர் சி. கணேசன் 287

உரைகளும் உரையாசிரியர்களும்
முனைவர் ஏ. கோதண்டராமன் 290

வ..உ. சி.யின் மறக்கவொண்ணா தமிழ்த் தொண்டுகள்
முனைவர். ம. தாமரைச்செல்வி 297

ஆன்மீகக் கல்வியின் அவசியம் குறித்து வேதாத்திரி மகரிசி அவர்கள் வலியுறுத்தும் கருத்துக்கள்
த. கௌரி - முனைவர் க. சுமதி 302

ஈரம் கசிந்த நிலத்தில் - மாறாப் பண்பாட்டின் மண்ணில் விழுந்த விதை - அம்மணி
ரா. கவிதா - முனைவர் செ. இளையராஜா 306

பேடிக்கூத்து அன்றும் - இன்றும் - பெ. வெங்கடேஷ் 311

ஆற்றுப்படை இலக்கிய அமைப்பும் இலக்கணமும்
திருமதி ம. பாக்கியலட்சுமி - முனைவர் சு. சதீஷ்குமார் 316

சூழலியக் கோட்பாடு - முனைவர் பி.அனுராதா 320

கவிஞர் பழநிபாரதியின் கவிதைகளில் அழகியல்
வ. ஜெயக்குமார் 325

ஜெயகாந்தன் சிறுகதைகளில் பெண்களின் வாழ்வாதாரம்
ஆர். பிரமிளா - முனைவர் கோ. சுரேஷ் 329

மந்தரை (கூனி) - திருமதி பா. பத்ரகாளி 334

திருப்பரங்குன்றத்தின் மகிமையும் செவ்வேளின் அருளும்
முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா 338

வரலாற்று அடிப்படையில் சிலம்பும் -முதுவரும்
முனைவர் அ. மகபுபூ 342

சங்க இலக்கியம் காட்டும் ஆநிரை வளர்ப்பும் மருத்துவமுறையும்
முனைவர் ம. சித்ரகலா 346

ஆசிரியம்... வாழ்வின் உயிர்மை - முனைவர் ச.சந்திரகலா 351

சைவ சித்தாந்தம் முன்வைக்கும் உயிர் - த. பாலமுருகன் 354

தீர்த்தயாத்திரை நாவலில் பெண் சித்தரிப்புகள்
ப. அருணா - முனைவர் இரா. கோகுல் 356

சங்க இலக்கியத்தில் தோழி உளவியல் - தே. ராஜகுமார் 360

முதுமொழிக் காஞ்சியில் நட்பு - கு. நளினி 364

வர்மக் கலையும் மருத்துவக் குணங்களும் - க. இராஜா 367

பாரதி ஒரு கடல் - முனைவர் ச. இராஜலதா 372

பட்டினப்பாலையில் வணிகம் - முனைவர் து. விசாலாட்சி 375

திருமூலர் பாடல்களில் பன்முகச் சிந்தனைகள் - கோ. மலர்விழி 378

சிலப்பதிகாரத்தில் தமிழனின் பண்பாடுகள் - இரா. வீரமணி 382

கணினித் தமிழும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பும்
ச. இலக்கியசங்கீதா - க. பிரியா 387

அறிவியல் நோக்கில் சைவசித்தாந்த தத்துவங்கள்
வீ. பொன்னுசாமி - நா. சண்முகம் 390

சங்க இலக்கியத்தில் போர்ச்சூழல் - ரா.திவ்யா 394

https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print)
ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025
ISSN: 3049-2688 (Online)

# சங்க இலக்கியம் காட்டும் ஆநிரை வளர்ப்பும் மருத்துவமுறையும்

**முனைவர் ம. சித்ரகலா**
உதவிப் போராசிரியர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

## முன்னுரை

மனிதகுலம் உயிர்பெற்று வாழ வேளாண் தொழில் இன்றியமையாததாகின்றது. வேளாண் தொழிலின் அணி வேர் என்று சொன்னால் அது கால்நடை வளர்ப்பே எனலாம். கால்நடைகளைப் பெருஞ்செல்வம் கருதியதும், தொழுவம் அமைத்தல், பசுவையும் தொழுவத்தையும் புனிதமாக எண்ணுதல், இனப்பெருக்கம் செய்தல், மேய்ச்சல் முறையும் பாதுகாத்தலும், பால் வளமும் பயன்பாடும், கால் நடை மருத்துவ முறைகள் போன்றவைகள் இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் பயனுள்ளவை என்ற அடிப்படையிலும், சமுதாய மாற்றங்களால் செயற்கை தன்மை மேம்பட்டு இயற்கை அழியும் சூழலைப் பாதுகாக்கும் பொருட்டும் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

## தொழில்

மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ள பொருளாதாரம் இன்றியமையாத தன்மையுடையதாகிறது. இதனை வள்ளுவ பெருந்தகை,

> "அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
> இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள். 247)

என்று குறிப்பிடுகிறார். அப்பொருளாதாரத்தை மேம்படுத்த மனிதன் தனக்கு தெரிந்த அல்லது தனக்கு ஏற்ற ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டு அதன்வழி தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறான்.

ஆதி காலகட்டங்களில் இயற்கை சீற்றங்களுக்குப் பயந்து மனிதன் குழுவாக கூடி வாழ்ந்து வந்தான். பின் தன் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டும் கால சூழல்களுக்கு ஏற்பவும் இடம்விட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்தான். இவ்வாறு காலச்சூழலுக்கேற்ப இடம்விட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்த மனிதனை நாடோடிகள் என்று குறிப்பிடுகின்றனர். இதனை, "நாடோடிகள் என்னும் சொல் வேட்டையாடி உணவு சேகரிக்கும் நாடோடிகளையும் (Nomadic hunters and gatherers) ஆயர் வாழ்க்கையை மேற்கொண்டுள்ள நாடோடிகளையும் (Pastoral nomads) தட்டு முட்டுச் சாமான்களை செப்பனிடுதலையும் வாணிகம் செய்தலையும் மேற்கொண்டுள்ள நாடோடிகளையும் (tinker and trader nonads) குறிக்கும் (பண்பாட்டு மானிடவியல் ப. 465) என்று பக்தவச்சலபாரதி குறிப்பிடுகிறார். இவ்வாறு நடோடியாக வாழ்ந்த மனிதனின் வாழ்வு ஐவகை நில அமைப்பின் தன்மைக்கேற்பவும், இயற்கை சூழலின் தன்மைக்கேற்பவும் மாறுபட்டது. "முதன் முதலில் நாடோடிகளாக வாழ்ந்த அவர்கள் தங்களது அறிவு வளர, வளர பயிர்த்தொழில் போன்றவற்றையும் செய்ய முற்பட்டனர். பயிர்த்தொழில் செய்ய முற்பட்ட அவர்கள் தங்களது நடோடி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து ஓரிடத்தில் குடியேறத் தொடங்கினர்" (பழந்தமிழகத்தில் இரும்புத்தொழில், ப. 67) என்று வே.சா. அருள்ராக குறிப்பிடுகிறார். இவ்வாறு "நிலப்பகுதிகள் தோறும் தங்கி நிலைத்து வாழத்தலைப்பட்ட மனித சமுதாயம் ஆங்காங்கே இருந்த இயற்கைச் சூழல்களை அடிப்படையாய்க் கொண்டு தமது வாழ்வை அமைத்துக்

கொண்டனர். அவரவர் வாழ்ந்த நிலவியல்பு, அவரவர் பயன்படுத்திய உற்பத்திக் கருவிகள் ஆகியவற்றிற்கு ஏற்ப அவரவர் வாழ்வியல் நிலைகளும் வேறுபட்டு அமைந்திருந்தன" (சங்க கால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும், ப. 10) என்பதன்வழி நிலவியல் அடிப்படையில் மக்களில் வாழ்வியல் முறைகள் அமைந்திருந்தன என்பது புலனாகிறது. இவ்வாறு ஐவகை நிலத்தின் தன்மைக்கேற்ப மனிதன் வேட்டையாடுதல், ஆனிரைமேய்த்தல், வேளாண்மை, மீன்பிடித்தல் கொள்ளையடித்தல், வழிப்பறி செய்தல் போன்ற பலவிதமான தொழில்களைச் செய்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் இயற்கை முறையில் ஆனிரை மேய்த்தலும், வளர்த்தலும், பாதுகாத்தலும் பற்றி ஆராய்தல் இன்றைய காலத் தேவை என்பதை முன்னிருத்தி இக்கட்டுரை ஆராயப்பட உள்ளது.

## ஆநிரையே பெருஞ்செல்வம்

ஆ – பசு, நிரை - கூட்டம். ஆநிரை என்பது பசுக்கூட்டத்தைக் குறிக்கும் சங்க இலக்கியத்தில் ஐவகை நில மக்களில் முல்லை நில மக்களுடைய முதன்மைத் தொழிலாகக் கால்நடைவளர்ப்பு இருந்தது. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்களும், மருத நிலத்தில் வாழ்ந்த மக்களும் கால்நடை வளர்ப்பு தொழிலைச் செய்தனர். கால்நடை வளர்ப்பு பெரும் செல்வமாகக் கருதப்பட்டதால் அதனைப் போற்றலும் காத்தலும் இன்றியமையாததாகின்றது. காளைகளும் காராம்பசுக்களும் மகாலட்சுமியின் பெரும் அம்சமாக இந்தியாவைத் தாண்டி உலவக வரலாற்றில் உயர்ந்துள்ளது. ஆநிரை மேய்ப்பவராக இயேசுநாதரும், மோசஸ் போன்றவர்களும் காளை வாகனனாக சிவபெருமானும், ஆயர்பாடியில் ஆயர்குலச் செல்வனாகக் கண்ணனும் வாழ்ந்த வரலாறும் புராணமும் ஆநிரையின் இன்றியமையாத தன்மையை உலகுக்கு எடுத்துரைக்கின்றன. பொய்யாமொழிப்புலவர் திருவள்ளுவர்,

ஆபயன் குன்றும் அறுதொழிலோர்
நூல்மறப்பர் காவலன் காவான்

என்று திருவள்ளுவர் காத்தற்குரிய அரசன் உயிர்களைக் காவானாயின், அறன் இல்லாத அவன் நாட்டுப் பசுக்களும் பால் குன்றும் என்றும் அறுதொழில் செய்யும் அந்தணர், சானறோர்கள் நூல்களை மறந்துவிடுவல் என்று குறிப்பிடுகின்றார். ஆக நல்லன நிறைந்த நாட்டில் பால் பெருகும். செல்வம் கொழிக்கும் என்பதை உணர்த்துகிறார் திருவள்ளுவர்.

முல்லை நில மக்கள் அதிகம் ஆநிரைகளை வளர்த்தனர் என்பதை,

"பல் ஆன் பொதுவர்" (கலி. 103: 5)

"பல் ஆ நெடுநெறி (குறுந். 64:1)

"எல்லுப் பெயல் உழந்த பல் ஆன் நிரையொடு" (அகம். 264:5)

என்ற பாடல் வரிகளின்வழி அறிய முடிகின்றது. பசுக்கள் செல்வச்செழிப்பின் அடையாளமாக கருதப்பட்டதால் ஒரு மன்னன் பகைவரின் செல்வத்தை அடைய ஆநிரைகளைக் கவர்ந்தான் என்பதை, (அகம். 342.6), (புறம் 264: 4,5) என்ற பாடல் வரிகளில் விளக்கப்பட்டுள்ளது.இதனை, சி. கைலாசபதி அவர்கள் "அக்காலத்தில் செல்வப் பொருளாக மாடு அமைந்த காரணத்தாலேயே அது சமுதாயத்தில் போருக்கு காலாயமைந்தது. பசுவைக் கவருவோரும், கவருவோரைத் தடுக்க முனைவோரும் மூர்க்கமான போரில் ஈடுபட்டனர். மாடே செல்வமாகவும், ஆதாரமாகவும் இருந்ததால் அவற்றைக் காப்போர் தமது உயிரைக் கொடுக்கவும் பின்னிற்கவில்லை" (பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 510) என்று மாடுகள் பெருஞ்செல்வமாகக் கருதப்பட்டதை குறிப்பிடுகின்றார்.

## தொழுவம் அமைத்தல்

மாடுகளின் உற்பத்தி திறனைப் பெருக்குவதற்கும், பால், தயிர் வெண்ணெய், நெய் போன்றவற்றை உயர்ந்த தரமுடன் பெருவதற்கும் கால்நடைகளுக்குத் தொழுவம் அமைத்தனர். மாடுகளைப் பராமரிக்கும், தங்க வைக்கும் இடத்திற்கு தொழுவம், மன்று (அகம் 64.14) என அழைக்கப்பட்டது. இத்தொழுவங்களை வீடுகளின் அருகிலேயே அமைத்துக்கொண்டனர். மாடுகளுக்கு அதிக வெயில், மழை, சுற்றுச்சூழல் போன்றவற்றின் காரணமாக பாதிப்பட கூடாது என்பதற்காக தொழுவம் அமைந்தனர். மாடுகள் மழையில் நனையாதவாறு தொழுவம் அமைத்ததை,

"வெஞ்சின அரவின் பைந் தலை துமிய
உர உரும் உரறும் அரை இருள் நடுநாள்
நல் ஏறு இயங்குதொறு இயம்பும்
பல் ஆன் தொழுவத்து ஒரு மணிக்
குரலே" (குறுந். 190:4 – 7)

என்ற பாடல்வரி விளக்கி நிற்கின்றது. மாடுகளுக்கு மட்டுமின்றி கன்றுகளுக்கும் தனி தொழுவம் அமைத்ததை,

"கொடுந் தொழுவினுள் பட்ட கன்றிற்குச்
சூழும்

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

கடுஞ்சூல்ஆ நாகு போல்" (கலி.110. 13, 14)

என்ற பாடல் சுட்டி நிற்கின்றது. இக் காலத்திலும் மாடுகளுக்குத் தொழுவம் அமைக்கின்றனர். ஆனால் அத்தொழுவங்கள் சரியான முறையில் காற்றோட்ட வசதியுடன் போதுமான இடவசதியுடன் அமைக்கப் படுதல் அவசியம் என்பதை, "தொழுவங்கள் சரியான முறையில் அமையாமையால் பல நோய்கள் கால்நடைகளுக்கு ஏற்படுகின்றன. நம்மவரில் பலருக்கு மாட்டுத் தொழுவங் களைச் சரிவர வைத்துக் கொள்ளத் தெரியாத காரணத்தால் மாடு வளர்ப்பவர் குடும்பங்களிலும் பல நோய்கள் இருந்து வருகின்றன. ஆகவே மாடு வளர்ப்பில் இடவசதி முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும்" (கறவை மாடு, ப. 59) என ச.கு. கணபதி குறிப்பிடுவது உற்று நோக்கத்தக்கதாகும்.

மரபு மாறிய இக்காலகட்டத்தில் உள்ள மக்களும் இத்தொழில் செய்கின்றனர். இருப்பினும் அவர்களுக்கு சரியான முறையில் தொழுவம் அமைக்க அளவை முறையில், "கொட்டகையின் அகலம் 25 முதல் 30 அடி வரை இருக்க வேண்டும். கொட்டகையில் மைய உயரம் 10-12 அடியும், பக்கவாட்டு உயரம் 9 அடியும் இருக்க வேண்டும். கொட்டகையின் அகலச் சுவர்கள் 4-5 அடி உயரத்திற்கு எழுப்பி, அதற்குமேல் குறுக்குக் கம்பிகள் இணைத்து கால் இடத்தை மூடி விடலாம் "(செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் கால்நடை பராபரிப்பு பயிற்சி கையேடு, ப.48) என்று தெளிவுறுத்து கின்றனர். அக்காலகட்டத்தில் மாடுகளுக்கு தொழுவம அமைத்தது போல கன்றுகளுக்குத் தொழுவம் அமைத்திருந்தனர். அதுபோலவே இக்கால மக்களும் கன்றுகளுக்குத் தொழுவம் அமைக்கும் முறையை, "மூன்று மாத வயது வரை ஒவ்வொரு கன்றுக்கும் 1 ச.மீ இடமும், 3 மாதத்திற்கு மேல் 2 ச.மீ இடமும் தேவை. 3 மாத வளது வரை 5 கன்றுகளையும் அதற்குமேல் 10 கன்றுகளையும் ஒரே அறையில் அடைக்கலர். ஒரே அறையில் அடைக்கப்படும் கன்றுகள் ஒத்த வயதுடைய வையாலக இருத்தர் அவசியம். கொட்டகை யில் சுவரின் உயரம் 1 மீட்டருக்கு மேல் இருக்கக் கூடாது" (மேலது, ப.30) என பெரு. மதியழகன் குறிப்பிடு கின்றார். ஆக பண்டு தொட்டு இன்று வரை இத்தொழில் பரவலாக இருந்துவருவதை இத்தொழிலை சரியான முறையில் செய்ய பயிற்சிகளும் பயிற்றுநர்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது எனலாம்.

### பசுவையும் தொழுவத்தையும் புனிதமாக எண்ணுதல்

கால்நடைகளைச் செல்வமாக மட்டும் கருதாமல் தெய்வமாக வழங்கும் மரபும் பண்டு தொட்டு இன்றுவரை இருந்து வருகின்றது. மேலும் மாடு கட்டும் தொழுவங் களைப் புனிததலமாகக் கருதி அவ்விடத்தில் எந்த ஒரு தீவினையும் செய்யாமல் இருந்தனர் என்பதை,

**"என்னை ஏமுற்றாய் விடு**
**விடேஎன்: தொடீஇ, செல்வார்த் துமித்து எதிர் மண்டும்**
**கடு வய நாகு போல் நோக்கி, தொழுவாயில் நீங்கி, சினவுவாய் மற்று**
**நீநீங்கு...."** (கலி. 116: 4-8)

என்ற பாடலின்வழி தலைவியிடம் விருப்ப த்துடன் கூடுதலில் பொருட்டு தலைவன் நெருங்கும் போது தலைவன், தலைவியைத் தொழுவை விட்டு வெளியே வருமாறு அழைக்கிறான். இப்பண்பை நோக்குங்கால் தொழுவினுள் சேர்ந்தால் தீவினையாகும் என்பதை உணர்ந்து செயல்படும் செயல் பாடு உணரத்தக்கது. பசுவையும் தொழுவத் தையும் புனிதமாக நோக்கும் மரபு இன்றும் இருப்பதால்தான் இன்றும் கோமாதா பூசையும், தைத்திருநாளில் மாட்டுப்பொங்கல் வழிபாடும் இருப்பதோடு சிவபெருமானின் வாகனமாகவே காளை இருப்பதும், இப்பெருமைகளை உணர்ந்த தமிழர்கள் ஜல்லிக்கட்டு போராட்டம் நடத்தியதும் நம் பாரம்பரியம் காக்கவும் புனிதம் மேம்படவும் என்பது உற்றுநோக்கத்தக்கது.

### இனப்பெருக்கம் செய்தல்

தன் இனத்தில் புதியஉயிர்களை உருவாக்கு தலை இனப்பெருக்கம் அல்லது இனவிருத்தி என்று சொல்லலாம். இங்கு கால்நடைகளின் எண்ணிக்கையை மேம்படுத்தும் பொருட்டு இனப்பெருக்கம் செய்ததை,

**"வெஞ் சின அரவின் பைந்தலை துமிய**
**உர உறும் உரறும் அரை இருள் நடுநாள்**
**நல் ஏறு இயங்குதொறு இயம்பும்**
**பல் ஆன் தொழுவத்து ஒரு**
**மணிக்குரலே"** (குறுந். 190: 4-7)

என்ற பாடலின்வழி பல பசுக்கள் உடைய தொழுவத்தில் நல்ல ஆனேறு அப்பசுக்களை நாடிச் செல்லும் செயல் விளக்கப்படுகின்றது. மேலும் பசுக்களுடன் கூடும் காளை நல்ல உடற்திறனுடனும், உடற்தகுதியுடனும் இருப்பதை,

**"உருமின் அதிரும் குரல் போல,**

பொருமுரண்

நல் ஏறு நாகுடன் நின்றன" (கலி 113: 27,28)
என்ற பாடலின்வழி உணரமுடிகின்றது. ஆக சங்க இலக்கியத்தில் இயற்கை முறையில் இனப்பெருக்கம் நடைபெற்றது என்பது புலனாகின்றது. இன்றைய கால கட்டத்தில் செயற்கை முறை கருவூட்டல் நடைபெரு வதை, "தரமான பொலிகாளைகளில் இருந்து பெறப்பட்ட விந்தணுக்களை மாடுகளின் கருப்பையில கருவிகளின் துணையுடன் செயற்கை முறையில் செலுத்துவதே "(செயற்கை முறை கருவூட்டல் மற்றும் கால்நடை பராமரிப்பு, ப.111) செயற்கை முறை கருவூட்டல் ஆகும். இதுபோல கலப்பு இனச் சேர்க்கையும் செயற்கை கருவூட்டலில் நடத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## மேய்ச்சல் முறையும் பாதுகாத்தலும்

நன்றாக மாடுகளை மேய்த்து பராமரித்தால் நற்பலன் கிடைக்கும் என்பதை உணர்ந்த சங்க மக்கள் நல்ல மேய்த்தல் புலன்களில் மாடுகளை பகல் முழுவதும் மேய்த்தனர் என்பதை

"படசு மணி மிடற்ற பய நிரை ஆயம்
கொடு மடி உடையர் கோற் கைக் வோவலர்
கொன்றை அம் குழலர் பின்றைத் தூங்க
மனைமனைப் படரும் நனை
நகுமாலை" (அகம். 54: 9-12)

என்ற பாடல்வழி அறியலாம். மேலும் பசுக்களுக்குத் தீவனமாகப் புற்கள் பயிர்கள் மற்றும் மர இலைகள் ஆகியனவற்றை தீவனமாக அளித்தனர். அருகம்புல் மிக முக்கியமான தீவனமாக விளங்கியது. "புல் ஆர் நல் ஆன்" (குறுந். 275. 4) முல்லை நிலத்தில் உள்ள அருகம்புல்லை வயிறு நிரம்ப மேய்ந்த பசுக்கள் மடி நிறையப் பால் சுரந்து, தன் கன்றுகளை அழைக்கும் செய்தியை,

"முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்
குறும்பொறை மருங்கின் நறும்பூ வயரப்
பதவு மேயல் அருந்தி மதவு நடை நல்லான்
வீங்குமாண் செருத்தல் தீம்பால் பிலிற்றக்
கன்று பயிர் குரல மன்றுநிறை புகு தரு
(அகம்.14: 7-11)

என்ற பாடல்வரிகளின் வழி அறியலாம். இவ்வாறு சங்க மக்கள் இயற்கைவழி மாடுகளைப் பராமரித்து உற்பத்தியையும் இனவிருத்தியையும் செய்தனர். ஆனால் இன்றைய கால கட்டங்களில் மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் குன்றிவிட்டதாலும், பருவ மழை பொய்த்து நில வரட்சியின் காரணமாகவும் மாடுகளுக்கு நன்முறையில் தீவனங்கள் கிடைப்பதில்லை. வைக்கோலை வாங்கி போர் போட்டு வைத்து அதனையே கொடுப்பதால் பால் வரத்தும் தரமும் பாதிப்புக்குள்ளாவதை ச.கு. கணபதி ஐயர் "பசும்புல் மிகுதியாக உள்ள மேய்ச்சல் தரையில் மேய்ந்து வரும் மாடுகள் பலமுள்ளவை. வைக்கோலை மட்டும் தின்னும் மாட்டின் பாலைவிட அவற்றின் பால் மேலானது மிகுதியானது" (கறவை மாடு, ப. 81) என்று குறிப்பிடுகின்றார்.

தற்காலகட்டங்களில் கிராமப்புறங்களில் பலவிதமான மரங்களின் இலைதழைகளை ஆடுமாடுகளுக்குத் தீவனமாக கொடுக்கி ன்றனர்.

## பால் வளமும் பயன்பாடும்

சங்க காலத்தில் இடையர்கள் பால் கறப்பதில் நன்கு பயிற்சி பெற்றவர்களாக இருந்தனர். மாடுகள மேயும் இடத்திற்கே கலத்தோடு சென்று தலைவி பால் கறந்ததை,

"கலத்தொடு யாம் செல்வழி நாடி புலத்தும்
வருவையால்" (கலி. 116:16,17)

என்ற பாடல்வரி விளக்கி நிற்கின்றது மேலும் பால் மிகவும் சத்தான உணவு என பால் பொருள்களை அதிகம் பயன்படுத்தினர் என்பதை,

"சேதான் வெண்ணெய் வெம் புறத்து உருக
(அகம்: 394:6)

என்ற பாடல்வழி அறியலாம். "முளி தயிர் பிசைந்த காந்தள் மெல் விரல்" (குறுந் 167) என்ற பாடலில் கட்டித் தயிரைப் பிசைந்து தன் கணவனுக்கு தலைவி சமைத்த அழகு காட்சிப்படுத்தப்பட்டிருப்பதன்வழி பால் பொருள்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டமை அறிய முடிகின்றது.

## கால் நடை மருத்துவம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை உணர்ந்த சங்க மக்கள் ஆநிரைகளை நோயின்றி காக்க பல மருத்துவ முறைகளைக் கையாண்டனர் மாடுகளுக்கு ஏற்படும் நோய்களின் தன்மைக்கேற்ப மருந்து கொடுப்பதும் விலா, கழுத்து, நெஞ்சு, வயிறு மற்றும் பாதிக்கப் பட்ட பாகங்களுக்குச் சூட்டுக்கோலால் சூடு வைப்பதும் வழக்கமாக இருந்தது. பண்டை கால வழக்கத்தில் இருந்த சூடிடும் முறைகளும் சூடு வைக்கப்படும் இடங்களும், அஜீரண நோய்க்கு கழுத்தைச் சுற்றியும், கக்கல் நோய்க்கு இடது விலா, அங்கி நோய் (இடது விலா) இந்து நோய் (நான்கு கால், முழங்கால் மற்றும் நெஞ்சு) ...யாய்கிறந்தி

நோய் (கால்). சீதவெதுப்பு நோய் இடது விலா, போகந்தி நோய் (இடது விலா) . எலும்புருக்கி நோய் (விலா), நேதி நோய் (இடது விலா) வல்லாள நோய் (இடது விலா), சாணத்துடன் உதிரம் விழும் நோய் (நெஞ்சு மற்றும் கழுத்து), நீரழிவு நோய் (இடது விலா), கோரை வீக்கம் (கழுத்து) நெஞ்சு வீக்கம் (வீக்கத்தின் மீது) குடல் முறுக்கு நோய் (நெஞ்சு) , ஈரல் முட்டி நோய் (கழுத்திலிருந்து வால் வரை), ஊதடைப்பன் நோய் (இடது விலா), நன்வாரி நோய் (இடது விலா) , பரங்கி நோய் (இடது விலா), தவளை நோய் (வலது விலா) மேதாவி நோய் (கீழ் வயிறு), கதவடைப்பன் நோய் (இரு பக்க விலா) தலைப்புது நோய் (இடது விலா) , தாளுந்து நோய் (இடது விலா), செங்க நோய் (இடது விலா) மூக்கடைப்பன் நோய் (மூக்கு), கொக்கை நோய் (இரு விலா), உதிரி நோய் (இடது விலா),தவகை மூக்கடைப்பான் நோய் (மூக்கு), அம்மணிச் சிலந்தி நோய் (கெஞ்சி) போன்ற நோய்களு க்கு சூடு வைக்கும் இடங்களும் குறிகளும் மாட்டு வைத்தியம் என்ற நூலில் விளக்கமாக படத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஆய்வின் எல்லை கருதி படங்கள் இடவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.) எலும்புருக்கி நோயை குணப்படுத்த,

“தும்பையிலை நா பிடி யுருவிவந்து /
துகலாமல் மை போலே அரைத்து கொண்டு

வம்பேது காடியென்ற கஞ்சிகாய்ச்சி /
வளமாக அரைத்தவுண்டை போட்டுக்கிண்டி

தம்பிநீ யெருதுக்கு யிதுவே பாகம் / தக்கபடி
மூன்று நாள் புகட்டியப்பால்

கம்பிதனை காச்சியிட விலாவு தன்னில் /
கண்டபடி பிசகாமல் மாட்டிப்போடே”

(மாட்டு வைத்தியம், ப. 5)

என மாட்டுக்கென்று பல மருத்துவமுறைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## தொகுப்புரை

சங்க காலத்தில் இயற்கை முறையில் மாடுகள் பராமரிப்பும் இனப்பெருக்கமும், மேய்ச்சலும் நடந்ததால் பால் மிகவும் சத்தான உணவாக கருதப்பட்டது என்பது ஆராயப்பட்டது.

இன்றைய காலத்தில் கலப்பினச் சேர்க்கை யின் வாயிலாக மாடுகள் இனப்பெருக்கம் நடைபெருவதாலும், செயற்கை கருவூட்டல் வழி இனப்பெருக்கம் நடைபெருவதாலும், செயற்கை உரம் உடைய மாட்டுத்தீவனங்கள் பயன்படுத்தப்படுவதாலும் இன்றைய கால கட்டத்தில் பால் தொழில் பெருகி உள்ளதே தவிர அது சத்து நிறைந்து உள்ளதா என்பது கேள்விக்குரியாக உள்ளது. இயற்கை அழியாமல் காப்பதும், இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதும், இயற்கையாக இனப் பெருக்கம் நடைபெறுதலும் பண்டைக் காலம் போல் நிகழ்ந்தால் மரபு வழி மாற்றம் ஏற்படாமல் வருங்கால சந்ததியினர் காக்கப் படுவர் என்ற சமுதாய அக்கரையுடன் சிந்திப்போமானால் வளமான சமுதாயம் உருவாகும். ஆநிரைத் தொழில் வளம் பெறும். நாட்டுவளம் மேம்படும் வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

## துணை நின்ற நூல்கள்


1. செயபால், இரா., அகநானூறு, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், அம்பத்தூர், சென்னை, நான்காம் பதிப்பு - 2011.
2. தட்சிணாமூர்த்தி, அ., ஐங்குறுநூறு, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், அம்பத்தூர், சென்னை, நான்காம் பதிப்பு - 2011.
3. பாலசுப்பிரமணியன், கு.வெ., - நற்றிணை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், அம்பத்தூர், சென்னை, நான்காம் பதிப்பு - 2011.
4. விசுவநாதன், அ., கலித்தொகை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், அம்பத்தூர், சென்னை, நான்காம் பதிப்பு - 2011.
5. கணபதி ஐயர், ச.கு., - கறவைமாடு, கிராமஜோதி நூல், சென்னை, முதற்பதிப்பு 1957.
6. துரைசாமி முதலியார்., - மாட்டுவைத்தியம், தெய்வமகள் விலாசம் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 1951.
7. கைலாசபதி, சி., - பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் புத்தக இல்லம், முதற்பதிப்பு - 1999.
8. பக்தவத்சல பாரதி., - பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 1990.
9. அருள்ராசு, வே.சா., - பழந்தமிழகத்தில் இரும்புத் தொழில் (முனைவர் பட்ட ஆய்வேடு), தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2002.
10. பரிமேலழகர், திருக்குறள்., கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு - 1972.
11. பாலசுப்பிரமணியன், கு.வெ., - புறநானூறு, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், அம்பத்தூர், சென்னை, நான்காம் பதிப்பு - 2011.
12. செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் கால்நடை பராமரிப்பு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல், சென்னை